2. கவன ஈர்ப்பு.

(அ) மதுரை, பசுமலை மகாலட்சுமி மில் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமை.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''மதுரை, பசுமலை, மகாலட்சுமி மில் நிர்வாகம் தொழிலாளர்களுக்குச் சரிவர வேலை கொடுக்காமலும், வேலை செய்த தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுக்காமலும், வருங் கால வைப்பு நிதி, பணிக்கொடை போன்ற தொழிலாளர் நல நிதிகளுக்குத் தொழிலாளர்களிடமிருந்து பிடிக்கப்பட்டும், ஆலை நிர்வாகம் பங்குத் தொகை செலுத்தாமல் இருப்பதால் ஏற் பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

மதுரை, மகாலட்சுமி டெக்ஸ்டைல் மில்ஸ் ஓர் இடருதவி நிர்வாகமாக (Relief Undertaking) அரசு தொழில் துறையின் (Industries) 21-2-1983 நாளிட்ட அறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டது. அதன் பிறகு, 8-9-1985 முதல் மேலும் ஆறு மாதத்திற்கு இடருதவி நிர்வாகமாக நீட்டிக் கப்பட்டது. தற்போது, இந்நிறுவனம் 7-3-1986-க்குப் பிறகும் மேலும் ஒரு வருடத்திற்கு இடருதவி நிர்வாகமாக அறிவிக்கப் பட்டுள்ளது. எல்லா கடன்களையும் காலந் தாழ்த்தி தீர்ப் பதற்கான சட்ட இசைவும் அறிவிக்கையில் அளிக்கப்பட்டுள்ளது.

2. இவ்வாலையில், 1,200 தொழிலாளர்கள் பணி புரி கின்றனர். தற்போது ஆலையில் வேலை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. 1986, செப்டம்பர் மாதம் முடிய தொழிலாளர் களுக்கு சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டு விட்டது. பணி புரியும் தொழிலாளர்களில் 250 தொழிலாளர்களுக்கு மட்டும் 1986, அக்டோபர் மாத சம்பளம் வழங்கப்பட்டுவிட்டது. மீத முள்ள தொழிலாளர்களுக்கு இம்மாதத்திற்குள் சம்பளம் பட்டு வாடா செய்யப்படும் என்று நிர்வாகம் தெரிவித்துள்ளது. டோக் கன் இல்லாத தொழிலாளர்களுக்கு மட்டும் தொடர்ந்து வேலை கொடுக்கப்படவில்லை.

3. ஈ.எஸ்.ஐ. மற்றும் ஈ.பி.எப். நிலுவைகள் இரண்டரை ஆண்டுகளாக செலுத்தப்படாமல் உள்ளன. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரால் நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்

1986 நவம்பர் 20] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

பட்டு வருகிறது. 1986, மே மாதம்வரை ஈ.பி.எப். நிலுவையாக நிர்வாகம் ரூ. 57·16 இலட்சம் செலுத்த வேண்டி உள்ளது. இதற்கு தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சட்டத்தின்படி நிர்வாகத்திற்கு எதிராக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஐ.பி.சி. 405/409 ஆகிய பிரிவின்கீழ் நிர்வாகத்திற்கு எதிராக காவல் துறை, வழக்குகள் தாக்கல் செய்துள்ளது. தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பணிக்கொடை தொடர்பான கணக்குகள் தீர்க்கப்பட்டு, அதற்குரிய தொகைகள் ஆலையின் வைப்புத் தொகையில் போடப்பட்டுள்ளன. அதற்கு தொழிலாளர்களுக்கு வட்டி அளிக்கப்பட்டு வருகிறது.

4. மதுரை, தொழிற்சாலைகளின் துணைத் தலைமை ஆய்வர், மேற்படி ஆலையை 28-10-1986 அன்று ஆய்வு செய்து, சில மாதங்களில் சில பிரிவினர்களுக்கு தாமதமாக சம்பளம் வழங்கப்பட்டது தொடர்பாக சம்பளப் பட்டுவாடா சட்டத்தின் கீழ் நிர்வாகத்திற்கு காரணம் காட்டும் அறிக்கை வழங்கி தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

5. ஆலையின் நிதி நிலைமை மிகவும் மோசமாக உள்ளதாகவும், ''இன்டஸ்ட்ரியல் ரீ கன்ஸ்ட்ரக்ஷன் பேங்க் ஆப் இந்தியா,' மூலம் ரூ. 169 இலட்சம் நிதி பெற முயன்று வருவதாகவும் அதற்கான வாய்ப்புகள் உள்ளதாகவும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவையில் வைக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையில் ஏறத்தாழ 1,250 தொழிலாளர்களுக்குக் கடந்த இரண்டு மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்றும், சுமார் இரண்டரை ஆண்டுக் காலமாக அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய ஈ.எஸ்.ஐ. மற்றும் ஈ.பி.எப். நிலுவைகள் செலுத்தப்படாமல் இருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டு மாத காலம் தொழிலாளர்களுக்குச் சம்பளம் பாக்கி என்பது சாதாரண ஒரு காரியம் அல்ல. தொழிலாளர்களுடைய பொருளாதாரத்தின் முதுகெலும்பையே முறிக்கக்கூடிய ஒன்றாக அது அமையும். எனவே, இவற்றிற்காக நிர்வாகத்தின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். மேலும் தொழிலாளர் நலன் காக்க துரிதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையினுடைய நிர்வாகம், கடந்த 3 ஆண்டுக் காலமாக, ரிலீப் அன்டர்டேக்கிங் என்று சொல்லக்கூடிய இடர்

உதவி நிர்வாகமாக இருந்து வருகிறது என்று சொல்லப்பட்டு வருகிறது. 3 ஆண்டுக் காலமாக இடர் உதவி நிர்வாகமாக இருந்தாலும்கூட, இந்த ஆலை நிர்வாகம் இன்னும் சரிப்பட்டு வரவில்லை என்று நன்றாகத் தெரிகிறது. எனவே, இந்த நிலையைக் கருதி அரசே இந்த ஆலையை நேரடியாக எடுத்து நடத்திட முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா நிலைகளையும் ஆய்ந்த பிறகே அரசு அந்த முடிவிற்கு வரும்.

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகளில் குடிநீர்க் குழாய்கள் பராமரிக்கப்படாதது.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டம், சைமன் காலனி, வாணியக்குடி, குறும்பனை பகுதிகளில் குடிநீர்க் குழாய்களெல்லாம் பழுதடைந்து சாக்கடை நீரும் குடி தண்ணீரும் ஒன்றாகக் கலந்து வருவதால் புதிய குடிநீர்த் திட்டம் உருவாக்குவது பற்றிய'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அறிக்கை.

வாணியக்குடி,—2,280 மக்கள் தொகையைக் கொண்ட இந்த குடியிருப்பு குறுத்தெங்கோடு ஒன்றியத்தைச் சேர்ந்ததாகும். இக் கிராமத்தில் இருக்கும் திறந்த வெளிக் கிணற்றை ஆதாரமாகக் கொண்டு நீரேற்றுக குழாய்கள் மூலம் 5,000 காலன் நீர் கொள்ளளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டியில் நீர் ஏற்றப்பட்டு குடிநீர் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. இந்த நீரேற்றும் குழாய்களில் சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு கசிவு ஏற்பட்டு உள்ளது. அதனை உடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

ஒரு பாதுகாக்கப்பட்ட புது குடிநீர் திட்டம் ரூ. 3.72 இலட்சங்களுக்கு அங்கீகரிக்கப்பட்டு நடப்பு நிதியாண்டில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.